# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# *Ang Mo Kio Tamil Methodist Church*

## *12th ஜூலை / July 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

| | |
|---|---|
| **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **மிஸ் .எலிசபெத் குருசாமி**<br>Ms. Elizabeth Gurusamy |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **மிஸ் .எலிசபெத் குருசாமி**<br>Ms. Elizabeth Gurusamy |
| **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### போற்றும் போற்றும்!

*1. போற்றும் போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!*
*வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்*
*பாரிலேயும் நாம சங்கீர்த்தனம் செய்ய*
*மாந்தர் யாரும் வாரும் ஆனந்தமாய்!*
*நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு*
*இயேசு நாதர் நம்மையும் தாங்குவார்;*
*போற்றும் போற்றும்! தெய்வ குமாரனைப் போற்றும்!*
*பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்.*

*2. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!*
*பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்;*
*பாடுபட்டுப் பிராணத் தியாகமும்செய்து*
*வானலோக வாசலைத் திறந்தார்*
*மா கர்த்தாவே, ஸ்தோத்திரம் என்றும் என்றும்!*
*வாழ்க, வாழ்க, ஜெகத்து ரட்சகா!*
*அருள் நாதா, மாசணுகா பரஞ்சோதி!*
*வல்ல நாதா, கருணை நாயகா!*

*3. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!*
*விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்*
*போற்றும், போற்றும், மீட்பர் மகத்துவமாக*
*ஆட்சிசெய்வார் நித்திய காலமும்*
*ஏக ராஜா, மாட்சிமையோடு வந்து*
*இயேசு ஸ்வாமி, பூமியில் ஆளுமேன்*
*லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி*
*ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்.*

| | |
|---|---|
| ***மாறி வாசித்தல் 28ம் ஞாயிறு***<br>***“சங்கீதம் 91”*** | **சபையார் இணைந்து**<br>Congregation |

***“சர்வ வல்லவருடைய நிழல்”***

**Psalter Reading “Psalm 91”**

| | |
|---|---|
| **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord’s Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### துதித்துப் பாடிட பாத்திரமே

*1. துதித்துப் பாடிட பாத்திரமே*
*துங்கவன் ஏசுவின் நாமமிதே*
*துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்*
*தூயனை நேயனை ஸ்தோத்தரிப்போமே*

**ஆ அற்புதமே அவர் நடத்துதலே**
**ஆனந்தமே பரமானந்தமே**
**நன்றியாலுள்ளமே மிக பொங்கிடுதே**
**நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்**

*2. கடந்த நாட்களில் கண்மணிபோல்*
*கருத்துடன் நம்மைக் காத்தாரே*
*கர்த்தரையே நம்பி ஜீவித்திட*
*கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே - ஆ*

*3. அக்கினி ஊடாய் நடந்தாலும்tha*
*ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்*
*சோதனையோ மிக பெருகிடினும்*
*ஜெயம் நமக்கிந்ததால் ஸ்தோத்தரிப்போமே - ஆ*

*4. இந்த வனாந்தர யாத்திரையில்*

இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே - ஆ

*5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்*
*வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்*
*வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்*
*விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே – ஆ*

† **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

† **திருமறைப் பாடம்** — ***மிஸ். ஸ்வீட்லின்***
***எஸ்தர் 8 : 7 – 17*** — Ms. Sweetlin
**Scripture Reading**
Esther 8 : 7 – 17

**அருளுரை** — **மறைதிரு. ஆர்.பிரபு**
Sermon — Rev. R. Prabhu

† **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

***<u>சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே</u>***

*1. சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே*
*சர்வ வல்ல இயேசு என்னை நேசித்தார்*
*பெற்றதாம் நன்மைகள் ஒவ்வொன்றாய் எண்ணியே*
*பேரன்பு பொங்க என்றும் பாடுவேன்*

**ஆர்ப்பரித்து நான் ஆனந்தங் கொள்வேன்**
**ஆண்டவர் சமூகம் என்னைத் தேற்றுதே**
**துன்பங்கள் யாவுமே துரிதமாய் நீங்குதே**
**இன்ப இயேசு நாமத்தில்**

*2. பேரின்ப கீதம் என்னில் பொங்குதே*
*போன நாட்கள் என்னை கர்த்தர் தாங்கினார்*
*சோதனை சூழ்ந்து என் நம்பிக்கைக் குன்றினும்*
*சோர்ந்தழியாமல் என்றும் காத்ததால் - ஆர்ப்பரித்து*

*3. இரட்சிப்பின் கீதம் என்னில் பொங்குதே*
*இரட்சகர் என் பாவம் முற்றும் மன்னித்தார்.*
*மானிடர் மாறினும் அன்பை விட்டோடினும்*
*மா தேவ அன்பில் என்னைக் காத்ததால் -ஆர்ப்பரித்து*

*4. ஆனந்த கீதம் என்னில் பொங்குதே*
*ஆரவாரத்தோடே இயேசு தோன்றுவார்*
*ஆவலாய் விழித்தே ஆவியில் ஜெபித்தே*
*ஆயத்தமாய் நான் காத்து நிற்பதால் - ஆர்ப்பரித்து*

*5. சீயோனின் கீதம் என்னில் பொங்குதே*
*சீக்கிரம் வந்தென்னைச் சேர்த்துக்கொள்ளுவார்*
*பொன்முடி வேந்தனாம் தந்தை என் இயேசுவின்*
*பொன் மாளிகை நான் கிட்டிச் சேர்வதால் – ஆர்ப்பரித்து*

**அறிவிப்புகள்**
Announcements

† **<u>மனப்பாட வசனங்கள்</u>** — **சபையார் இணைந்து**
<u>Memory Verses</u> — Congregation
***யாக்கோபு 5 : 16***
James 5 : 16

***16. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.***

† **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

† **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

† ***சபையார் நிற்கவும்*** **/Indicates Congregation standing**